**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 1/2026**

**PW. 2**

**Date: 10.03.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ஆறுமுகம் | வயது | 59 |
| கணவர்/தந்தை பெயர் | கிருஷ்ணன் | தொழில் | – |
| கிராமம் | கோவிலம்பாக்கம் | வட்டம் | சோளிங்கநல்லூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **10th March 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.
எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை :</u>

1. அ.சா. 1 பணிபுரியும் உணவகத்தில் நான் வேலை செய்து வருகிறேன். ஒரு நாள் இரவு அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அதில் நான் கீழே விழுந்து விட்டேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். அ.சா.1 புகார் கொடுத்தார்.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கேட்டு கொண்டதன் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகிறது.**

2. கடந்த 25/11/2025 அன்று இரவு 10.15 மணியளவில் நான் பணிபுரியும் எஸ்.கே.எஸ் டிபன் கடையில் எதிரிகள் அனைவரும் எங்கள் கடைக்கு வந்து அ.சா.1 ஐ என்னையும் ஆபாசமாக திட்டினார்கள் என்றால் இல்லை. எதிரிகள் என்னை கைகளால் தாக்கி காயப்படுத்தியதாக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரிகள் தாக்கியதில் இடது கண் புருவத்தில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் கீழே விழுந்ததில் தான் காயம் ஏற்பட்டது. எதிரிகள் தாக்கினார்கள் என்றாலும் அதனால் நான் சுப்ரிம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. நானும் எதிரிகளும சமாதானமாக சென்றுவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI
Date: 2026.03.10 19:01:12 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 1/2026**
**PW. 1**
**Date: 10.03.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சந்தோஷ்குமார் | வயது | 22 |
| கணவர்/தந்தை பெயர் | சுரேஷ் குமார் | தொழில் | – |
| கிராமம் | மேலகொன்னகூளம் | வட்டம் | மானாமதுரை |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **10th March 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.
எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. நான் கல்லூரி படித்து வருகிறேன். நாங்கள் படூர் கழிப்பட்டூரில் ஹோட்டல் நடத்தி வருகிறோம். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பாக இரவு 10.00 மணி அளவில் ஆஜர் எதிரிகள் எங்கள் கடையில் சாப்பிட வந்தார்கள். அப்போது சிறிய வாக்குவாதம் ஏற்பட்டது. அதனால் கடைக்கு ஏதேனும் பிரச்சனை வந்து விடுமோ என எண்ணி அவசரப்பட்டு காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தோம். அதில் சிறிய தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இந்த சம்பவம் சம்பந்தமாக நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் **(புகார்)** உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்தது தான்.

2. நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**26/11/2025 தேதியிட்ட புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கேட்டு கொண்டதன் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகிறது.**

3. கடந்த 25/11/2025 அன்று இரவு 10.15 மணியளவில் எதிரிகள் அனைவரும் எங்கள் கடைக்கு வந்து என்னை ஆபாசமாக திட்டினார்கள் என்றால் இல்லை. நான் சமாதானமாக சென்று விட்டதால் சம்பவம் எப்போது நடந்தது என்று எனக்கு தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னுடன் பணிபுரியும் சாட்சி ஆறுமுகம் என்பவரை கைகளால் தாக்கி காயப்படுத்தியதாக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவருக்கு எதிரிகள் தாக்கியதில் இடது கண் புருவத்தில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI
Date: 2026.03.10 19:01:20 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.